Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt

# பெற்றோர்களுக்கான தகவல்கள்

## இரண்டாவது மொழியாக ஜேர்மன்மொழி **(DAZ)**





அன்பான பெற்றோர்களே!

சூரிச் மாநிலத்தில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தமது குடும்பங்களில் ஜேர்மன் அல்லாத வேறுமொழியினை பேசுகின்றனர். அனைத்து சிறுவர்களும் இளம்பராயத்தினரும் வகுப்பில் பாடங்களைப் பின்பற்ற அவர்களுக்கு போதுமான அளவு ஜேர்மன் மொழியை தெரிந்திருத்தல் வேண்டும் என்பது கட்டாயப்பாடசாலைகளின் குறிக்கோள்களில் ஒன்றாகும். மாணவ மாணவிகளுக்கு பாடசாலையானது தேவைக்கேற்ப இரண்டாவது மொழியாக ஜேர்மன்மொழி (DAZ) வகுப்பை வழங்கி உதவுகின்றது.

இரண்டாவதுமொழியாக ஜேர்மன்மொழியை கற்க பாடசாலையானது சிறுவர்களுக்கும் இளம்வயதினருக்கும் எவ்வாறு உதவி வருகின்றது என்பதைப்பற்றிய தகவல்களை கீழே காணலாம்.




## இரண்டாவது மொழியாக ஜேர்மன்மொழியை கற்பதற்கு பாடசாலையானது சிறுவர்களுக்கு எவ்வாறு உதவி வருகின்றது?

சிறுவர்பாடசாலை:

– சிறுவர் பாடசாலையில் இரண்டாவது மொழியாக ஜேர்மன்மொழி வகுப்பு **(DAZ)**
  ஜேர்மன்மொழியை குறைவாகவோ அல்லது தெரியாமலோ இருக்கும் பிள்ளைகள், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் ஊடாக தனித்தனியாக அல்லது குழுவாக மேலதிக உதவியைப் பெற்றுக்கொள்வர். ஒரு பிள்ளை குறைந்தது கிழமைக்கு இரண்டு பாடநேரமாவது இந்து உதவியை பெற்றுக்கொள்ளும். னுயுணு வகுப்புக்கள் சிறுவர் பாடசாலை பாடநேரத்திலேயே ஒருங்கிணைக்கப்பட்டு நடைபெறும்.

ஆரம்ப மற்றும் மேல்நிலைப்பிரிவு **(Sekundarstufe)**:

– **DAZ** ஆரம்பநிலை வகுப்பு
  சூரிச் மாநிலத்திற்கு குடிபெயர்ந்த ஜேர்மன்மொழியை மிகக் குறைவாகவோ அல்லது தெரியாமலோ இருக்கும் சிறுவர்களும் இளம்வயதினரும் பாடசாலையில் ஒரு வருடகாலத்திற்கு ஒவ்வொரு நாளும் «DAZ ஆரம்பநிலை வகுப்பை» (DAZ Anfangsunterricht) குழுவாகவோ அல்லது புதுமுக வகுப்பிலோ (Aufnahmeklasse) பெற்றுக்கொள்வர். அவர்கள் விரைவாக அடிப்படை ஜேர்மன்மொழி அறிவை பெற்று சாதாரண வகுப்பில் தொடர்ந்து செல்வதை வழிவகுப்பதே இதன் நோக்கமாகும்.

– **DAZ** மேல்நிலை வகுப்பு
  தமது ஜேர்மன்மொழியறிவை மேம்படுத்தவும் விருத்தி செய்யவும் இருக்கும் மாணவ மாணவிகள் னுயுணு மேல்நிலை வகுப்பை «DaZ-Aufbauunterricht» வாரத்தில் குறைந்தது இரு தடவையாவது பெற்றுக்கொள்வார்கள்.

மாணவ மாணவிகளுக்கு ஜேர்மன்மொழியை கற்க உதவி தேவைப்படின் பாடசாலையானது கீழ்வருமாறு செயற்படும்.

– உங்கள் பிள்ளைக்கு உதவி தேவையென ஆசிரியர் அல்லது பெற்றோராகிய நீங்கள் கருதினால் வகுப்பாசிரியர் ஒரு DAZ-கலந்துரையாடலுக்கு«DaZ-Standortgespräch» அழைப்பர். அங்கு நீங்களும் பங்கேற்கும் ஆசிரியரும் எவ்வாறான உதவியை உங்கள் பிள்ளை பெற்றுக்கொள்ளும் என்பதை ஏற்பாடு செய்ய முடியும். கருத்து வேறுபாடுகள் இருப்பின் பாடசாலை நிர்வாகம் தீர்மானிக்கும்.



– அதன் பின்பு DAZ ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட முன்னேற்ற உதவியை தயார்செய்து ஜேர்மன் மொழியை கற்பதற்கு உதவுவார்.
– அதுமட்டமின்றி வகுப்பாசிரியர் ஜேர்மன்மொழியை கற்க உதவுவதோடு அவர்கள் உங்கள் பிள்ளையின் ஜேர்மன்மொழி அறிவிற்கேற்ற பாடங்களை வழங்குவார்.
– வகுப்பாசிரியர் உங்கள் பிள்ளையின் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் நீங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதை உங்களுடன் கலந்துரையாடுவர்.

## பெற்றோர் என்ன செய்யலாம்?

– உங்கள் தாய்மொழியும், ஜேர்மன்மொழியும் முக்கியமானதும் மதிப்பு மிக்கதும் என்பதை உங்கள் பிள்ளைக்கு எடுத்துக்கூறுங்கள்.
– நீங்கள் உங்கள் பிள்ளையுடன் உங்களுக்கு மிகவும் சரளமான உங்கள் தாய்மொழியிலேயே பலதரப்பட்ட விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதன் மூலம் அவர்களினது சிறந்த மொழியறிவாற்றலுக்கு ஆதரவளிக்க முடியும்.
– ஜேர்மன்மொழி சார்ந்தவர்களுடனான தொடர்புகளை ஊக்குவிக்கவும். அதாவது உங்கள் பிள்ளை ஜேர்மன்மொழி பேசும் பிள்ளைகளுடன் விளையாட்டு இடங்கள், மழலையர் விளையாட்டுக் குழுக்கள், பிள்ளைகளை பகலில் பராமரிக்கும் மையங்கள், பாடசாலைக்கு பின்பான பராமரிப்பு நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், சாரணர் இயக்கம் போன்றவற்றில் பங்குபற்றுவதன் மூலம் ஜேர்மன்மொழியை கற்கின்றது.
– நீங்கள் உங்கள் பிள்ளையுடன் ஒன்றாக அருகாமையிலுள்ள நூலகத்திற்கு அல்லது கெமைண்டெயிற்கு (Gemeinde) கிரமமாக சென்று சிறுவர் புத்தகங்கள், ஒலிநாடாக்கள், அறிவியல் விளையாட்டுக்கள், ஒலி ஒளி ஊடகங்கள் போன்றனவற்றை எடுத்து வாருங்கள். பிள்ளையுடன் சேர்ந்து படங்கள் உள்ள புத்தகங்கள் பாருங்கள், ஒரு புத்தகத்தை வாசித்துக்காட்டுங்கள், பிள்ளையும் அதிகம் வாசிக்கின்றதா என்பதையும் அவதானியுங்கள்.
– தாய்மொழி கற்கும் சலுகைகள் இருப்பின் உங்கள் பிள்ளையை «தாய்மொழியும் கலாச்சாரமும்» வகுப்புக்கு (HSK, மேலதிக தகவல்களைப் பார்க்கவும்) அனுப்புங்கள். உங்கள் பிள்ளை இதனூடாக தாய் மொழியை வாசிக்கவும் எழுதவும் கற்கும். இரண்டுமொழியறிவு சிறந்த நன்மையளிக்கும்.
– உங்கள் பிள்ளை வீட்டில் ஒழுங்காக ஒரு அமைதியான இடத்தில் இருந்து வீட்டுப்பாடங்களை செய்ய முடிகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
– உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியருடனான தொடர்பை பேணுங்கள். அவர்களுடன் உங்கள் பிள்ளையின் நலன், மொழியறிவு மற்றும் கற்றல் நிலை போன்றவற்றை வெளிப்படையாக கலந்துரையாடுங்கள்.

## மேலதிக தகவல்கள்

«இரண்டாவது மொழியாக ஜேர்மன்மொழி மற்றும் புதுமுக வகுப்பு» பற்றிய விரிவான தகவல்களை கீழேயுள்ள இணையமுகவரியில் காணலாம்:
www.zh.ch/daz

தாய்மொழியும் கலாச்சாரமும் வகுப்பு பற்றிய தகவல்களையும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி போன்ற ஏனைய விடயங்களையும் கீழேயுள்ள இணையமுகவரியில் காணலாம்:
www.vsa.zh.ch/hsk und www.hsk-kantonzuerich.ch

பலமொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோருக்கான புத்தக உதவிக் குறிப்புகள்:
– Nodari C. / De Rosa R. (2003). Mehrsprachige Kinder. Ein Ratgeber für Eltern und andere Bezugspersonen. Bern: Haupt.
– Cathomas R. / Carigiet W. (2008). Top-Chance Mehrsprachigkeit. Zwei- und mehrsprachige Erziehung in Familie und Schule. Bern: Schulverlag.

006466